முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2021 சனவரி

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(Financial Controls and Audit)

2021-03-20
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  - (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  - (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடுக.*
  - (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

கோவிட்-19 நோய்த் தொற்றானது பல்வேறு தொழில்துறைகளையும் சார்ந்த உரிமங்களுக்கு கணிசமானளவு சவால்களை ஏற்படுத்தியுள்ளது. கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக வெளிவாரிச் சூழலில் (external environment) ஏற்பட்ட மாற்றங்களுக்கான உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

- கடன் சேவைகள் மீது ‘‘கடனை காலந்தாழ்த்தித் தீர்ப்பதற்கான சட்ட இசைவு’ வழங்கும் அரசாங்கக் கொள்கை.
- எளிய வரி முறைமையை நடைமுறைப்படுத்தும் அரசாங்கக் கொள்கை.
- வட்டி வீதங்களில் குறைப்பு.
- பௌதிக ரீதியான கூட்டங்கள் மெய்நிகர் (virtual) கூட்டங்களாக மாற்றப்பட்டமை (உதாரணம் : Skype, Zoom, Teams, போன்றவை ஊடாக).
- சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்கான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் அறிமுகம்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேற்படி ஒவ்வொரு உதாரணத்தையும் வெளிவாரிச் சூழல் காரணிகளுடன் / சக்திகளுடன் (PESTEL) **தொடர்புபடுத்துக.** (05 புள்ளிகள்)

## வினா 02

உமது நண்பரான **ராஜ்,** இடர் தணிப்பு நுட்பங்கள் ஊடாக வணிக இடரை முற்றாகத் தவிர்த்துக்கொள்ள முடியுமா என்பது பற்றி அறிய விரும்புகிறார்.

இடர் தணிப்பு நுட்பங்களைப் பின்பற்றினாலும்கூட வணிக இடரை முற்றாகத் தவிர்த்துக்கொள்ள முடியாது என நீங்கள் அவருக்கு விளக்கிக் கூறியுள்ளீர்கள். இடர் தவிர்ப்பு (risk avoidance) மற்றும் இடர் குறைப்பு (risk reduction) என்பன இடர்களைத் தணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு நுட்பங்களாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இடர் தவிர்ப்பு என்பதால் கருதப்படுவது யாதென உதாரணத்துடன் **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) இடரைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு (02) தந்திரோபாயங்களை **அடையாளங்காண்க**. (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட S அன்ட் S லங்கா (தனி) கம்பனி (S&S)** ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் ஒரு முறை கணக்காய்வாளர்களை மாற்றுகின்ற தனது கொள்கைக்கு அமைய, தனது வெளிவாரிக் கணக்காய்வாளர் களை மாற்ற விரும்புகிறது. 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **S&S** இன் வருடாந்தக் கணக்காய்வை நடத்துவதற்கான கணக்காய்வு ஈடுபடுத்தலின் கையளிப்புப் பற்றி கலந்துரையாடுவதற்காக **S&S** இன் பணிப்பாளர்கள் சபை உங்களது கணக்காய்வு நிறுவனத்தை அணுகியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட S அன்ட் S லங்கா தனியார் கம்பனி**யின் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் ஒன்றை ஏற்று முகாமை செய்யும் போதான மூன்று (03) பிரதான அம்சங்களையும் (aspects) தேவைப்பாடுகளையும் (requirements) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் ஒன்றின் இரண்டு (02) மூலகங்களைக் (elements) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

நிறுவனமும் அதன் தனியாட்களும் தொழில்சார் நியமங்கள் மற்றும் பொருத்தமான சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகளுடன் இணங்குகின்றனர் என்றும் நிறுவனம் அல்லது ஈடுபடுத்தற் பங்காளர்களால் வழங்கப்பட்ட அறிக்கைகள் சூழ்நிலைகளில் பொருத்தமானவை என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு தரக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை உருவாக்குவதும் பேணுவதும் நிறுவனத்தின் நோக்கமாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) தனித்தனியான ஈடுபடுத்தலின் தரக் கட்டுப்பாட்டில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய இரண்டு (02) கொள்கைகளை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) சேவை நாடுநர் (client) ஒருவரின் நேர்மை (integrity) குறித்து தரக் கட்டுப்பாடுகள் முறைமை ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய மூன்று (03) விடயங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட கொலோனியல் டிரேடிங் தனியார் கம்பனியின்** (கம்பனி) கணக்காய்வாளரான **கமகே அசோஸியேற்ஸ்** என்ற கணக்காய்வு நிறுவனத்தின் சிரேட்ட கணக்காய்வு அலுவலர் நீங்கள் ஆவீர்கள். ஈடுபடுத்தல் பங்காளர் கணக்காய்வுக் கோப்பை மீளாய்வு செய்துள்ளதுடன் கணக்காய்வு நிறைவு ஞாபகக் குறிப்பிலிருந்து பின்வரும் தகவல்களும் பிரித்தெடுக்கப்பட்டன :

- வரிக்கு முன்னரான இலாபத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்ட பொருண்மை ரூபா 500,000/-.
- கம்பனி ஒரு புதிய அலுவலகக் கட்டடத்தை நிருமாணித்திருந்தது. நிருமாணம் 2020 பெப்ரவரி 26 இல் பூர்த்தி செய்யப்பட்டதுடன், கட்டடம் 2020 மார்ச் 01 இலிருந்து பயன்பாட்டிற்கு வந்துள்ளது. கட்டடத்தின் கிரயம் ரூபா 15 மில்லியன் ஆனது 2020 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்றில் மூலதனப் புத்துருவாகும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டது. கம்பனி 10 ஆண்டுகள் பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக கட்டடங்களைத் தேய்மானம் செய்கிறது.
- 2020 மார்ச் 31 இல் ரூபா 8 மில்லியன் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட தொக்குகள் 2020 ஏப்ரலில் ரூபா 3 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்தக் கொடுக்கல் வாங்கலால் ஏற்பட்ட நட்டம் ரூபா 5,000,000/- ஆனது 2020 ஏப்ரலில் கம்பனியால் கணக்கிற் கொள்ளப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் அறிக்கையின் கணக்காய்வு அபிப்பிராயம் மீது மேற்படி விடயங்களின் தாக்கத்தை **மதிப்பிடுக.** (07 புள்ளிகள்)

(b) கணக்காய்வாளர் அறிக்கையில் கணக்காய்வாளரின் அபிப்பிராயம் தவிர, உள்ளடக்கப்படும் வேறு மூன்று (03) மூலகங்களைக் (elements) **குறிப்பிடுக**. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(A) **வரையறுக்கப்பட்ட YP (தனி) கம்பனி** ("கம்பனி") ஹோட்டல்களுக்கு பழங்களையும் மரக்கறிகளையும் வழங்கல் செய்வதில் ஈடுபட்டுள்ளது. கம்பனியின் பணிப்பாளர்கள் சபை 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சட்டநியதிக் கணக்காய்வை நடத்துவதற்கு உமது நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. நாட்டில் முன்னணி கணக்காய்வு நிறுவனமாக விளங்கும் முன்னைய கணக்காய்வு நிறுவனம் கணக்காய்வை மேற்கொள்ள மறுத்துள்ளதுடன் அதனை எழுத்துபூர்வமாக கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு அறிவித்துள்ளது.

முகாமையுடனான ஆரம்பகட்ட கலந்தாய்வின்போது, நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் வருடாந்த புரள்வு ரூபா 800 மில்லியன் என்பதையும் வங்கிகளில் உள்ள காசு ரூபா 1.5 பில்லியன் என்பதையும் நீங்கள் அவதானித்துள்ளீர்கள். கம்பனிக்கு எதிராக நீதிமன்றில் வழக்கொன்று நடைபெறுகிறது என்பதும் ஆனால் இது, ஆரம்பகட்ட கலந்தாய்வுக்கான ஒரு நிகழ்ச்சி நிரல் விடயமாக இருக்கவில்லை என்பதும் உங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது.

மேலும், கணக்காய்வினை 2021 ஏப்ரல் 20 இற்குள் இறுதிப்படுத்த வேண்டுமென பணிப்பாளர்கள் சபை எதிர்பார்ப்பதுடன் இந்தக் காலப்பகுதியில் உங்களுடைய நிறுவனத்திலுள்ள சகல மூன்று (03) பங்காளர்களும் சேவை நாடுநர்களின் பெரியளவான காலக்கெடு கணக்காய்வுகளில் (deadline audits) ஈடுபடுவதுடன், இரண்டு (02) சிரேட்ட மட்ட அலுவலர்கள் வெளிநாட்டு அலுவலகம் ஒன்றுக்கு அனுப்பப்படுவார்கள்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நீங்கள் **வரையறுக்கப்பட்ட YP (தனி) கம்பனியின்** கணக்காய்வை ஏற்றுக்கொள்வதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் கவனத்திற்கொள்ள வேண்டிய மூன்று (03) விடயங்களை **மதிப்பிடுக.**

(06 புள்ளிகள்)

(B) கணக்காய்வு ஈடுபடுத்தலைப் பொறுத்தவரை, இது பொது நலனுக்கானதாக இருப்பதால் கணக்காய்வு அணிகள் மற்றும் நிறுவனங்களின் உறுப்பினர்கள் கணக்காய்வுச் சேவை நாடுநரிடமிருந்து சுயாதீனமாக இருக்க வேண்டும் என்பது தொழில்சார் ஒழுக்கநெறிக் கோவையினால் தேவைப் படுத்தப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

சுயாதீனத்திற்கான சாத்தியமான அச்சுறுத்தல்களாக ஏற்பிசைவு செய்யப்படக்கூடிய நான்கு (04) சூழ்நிலைகள் / உறவுமுறைகளைக் (relationships) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(A) **ரங்கா** என்பவர் கணக்காய்வு நிறுவனமான **YTR அசோசியேற்ஸின்** ஒரு சிரேட்ட கணக்காய்வு அலுவலராவார். அவர் 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட பென் (தனி) கம்பனியின்** சட்டநியதிக் கணக்காய்வைத் திட்டமிடுகிறார். கணக்காய்வுத் திட்டம் மற்றும் வியாபார வருமதிகளின் வேலைத்தாள்கள் ஆகியவற்றின் பிரித்தெடுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன :

- பெரியளவு மீதிகளுடன் 5 வாடிக்கையாளர்கள் மாத்திரமே இருந்தனர்.
- வியாபார வருமதிகள் இருப்பதனால் பொருண்மை பிறழ்கூற்று இடர் உயர்வாக இருக்கிறது என கணக்காய்வாளர் மதிப்பிட்டுள்ளார்.
- மீதி உறுதிப்படுத்தல் கோரிக்கையில் வழங்கப்பட்ட தகவல்களுடன் உறுதிப்படுத்தும் தரப்பினர் உடன்படாதிருந்தால் மாத்திரமே கணக்காய்வாளர் பதில்களை (responses) எதிர்பார்க்கிறார். தவிர, வியாபார வருமதிகள் இருப்பது பற்றி வேறு எவ்வித வலுவளிப்பு (substantive) கணக்காய்வு நடைமுறைகளும் மேற்கொள்ளப்படவில்லை.
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வாடிக்கையாளரின் மீதியை உறுதிப்படுத்துவதற்காக கடிதம் ஒன்றை அனுப்ப வேண்டாம் என பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) கணக்காய்வாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கணக்காய்வாளரால் பின்பற்றப்பட்ட வெளிவாரி உறுதிப்படுத்தல் செயன்முறையில் உள்ள இரண்டு (02) பலவீனங்களை (weaknesses) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) CEO இனால் செய்யப்பட்ட கோரிக்கை தொடர்பில் **ரங்கா** மேற்கொள்ளக்கூடிய இரண்டு (02) நடவடிக்கைகளைக் (actions) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(B) கணக்காய்வாளர் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு ஒன்றிலுள்ள அடுத்தடுத்த நிகழ்வுகள் பற்றி கணக்காய்வு நடைமுறைகளை ஆற்றுகிறார். நடைமுறைகளின் ஒரு பகுதியாக, முகாமையிடமும் ஆளுகை பாரப்படுத்தப்பட்டோரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

முகாமையிடமும் ஆளுகை பாரப்படுத்தப்பட்டோரிடமும் ஒரு கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய அத்தகைய விசாரணைகள் நான்கினை (04) **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

(A) **வரையறுக்கப்பட்ட பயோ இன் வண் (தனி) கம்பனி ("BIO")** உள்நாட்டுச் சந்தைக்கான தேங்காய்ப் பால்மா தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. இது ஆறு (06) ஆண்டுகளுக்கு முன் தாபிக்கப்பட்டதுடன், ஆரம்பச் செயற்பாடுகள் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டன. தற்போது இக்கம்பனி சிறப்பங்காடிகள், நேரடி விநியோகத்தர்கள் மற்றும் முகவர்கள் உள்ளிட்ட 50 இற்கும் மேற்பட்ட மொத்த விற்பனை வாடிக்கையாளர்களுடன் விரிவாக்கப்பட்டுள்ளது. தயாரிப்புச் தொழிற்சாலையில் 120 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். எவ்வாறாயினும், **BIO** ஆனது முறையாக அமைக்கப்பட்ட பிரதான வணிகச் செயன்முறைகளைக் கொண்டிருக்கவில்லை.

- முகாமைப் பணிப்பாளரின் மனைவி **திருமதி நிலானி** விலைப்பட்டியலிடல் மற்றும் நிலுவைச் சேகரிப்புச் செயன்முறையைக் கண்காணித்தல் ஆகியவற்றில் ஈடுபடுகிறார். ஆயினும் அவர் கணக்கீடு அல்லது நிதி பற்றிய பின்னணி எதையும் கொண்டிருக்கவில்லை.
- முகாமைப் பணிப்பாளர் (MD) உங்களுடைய தொழில்சார் கணக்கீட்டு நிறுவனத்தை அணுகி, ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீட்டினைச் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். உமது கணக்கீட்டு நிறுவனத்தின் பொறுப்பான பங்காளர் (partner in–charge) கீழ்வரும் விடயங்களை அவதானித்துள்ளார்:
    - கடந்த 3 ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
    - பொருட் கொள்வனவுகள் பற்றிய பதிவுகள் மற்றும் செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்கான சான்று ஆவணங்கள் (supporting documents) என்பன முறையாகப் பேணப்படவில்லை. பிரதான பங்குதாரரான முகாமைப் பணிப்பாளர், பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதில் (கொள்வனவு செய்வதில்) தனிப்பட்ட ரீதியில் ஈடுபடுகின்றார்.
- சேவை நாடுநருடனான கலந்தாய்வின்போது, **BIO** ஆனது முறையான பதிவுகளைப் பேணுவதுடன் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை வைத்திருப்பதன் முக்கியத்துவம் பற்றி பொறுப்பான பங்காளர் MD இற்கு விளக்கியிருந்தார். உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைச் செயன்முறை ஒன்றை அமைப்பதில் கணக்கீட்டு நிறுவனம் தங்களுக்கு உதவ வேண்டுமென MD விரும்புகிறார். மேலும், பயிற்சி பெற்ற ஊழியர்களுடன் கணினிமயப்படுத்தப்பட்ட முறைமை ஒன்றைக் வைத்திருக்கவும் தீர்மானிக்கப்பட்டது.
- முதலாவது படிமுறையாக, MD, திருமதி நிலானி மற்றும் இரண்டு முகாமையாளர்கள் ஆகியோருக்கு **BIO** இற்காக முன்மொழியப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பற்றி விழிப்புணர்வூட்டும் முன்வைப்பு (presentation) ஒன்றினை செய்யுமாறு MD இனால் பொறுப்பான பங்காளரிடம் கோரிக்கையிடப்பட்டது. **BIO** ஒரு கணினிமயப்படுத்தப்பட்ட முறைமையைப் பயன்படுத்தவுள்ளதால் IT பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகள் பற்றியும் விளக்கமளிக்குமாறு பங்காளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **BIO** இல் காணப்படும் மூன்று (03) உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(b) பின்வருவனவற்றை சரியான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றுடன் **BIO** இற்குப் பொருந்தக்கூடிய தொடர்புடைய உதாரணம் ஒவ்வொன்று தந்து **விபரிக்குக** :

- செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் (Operational controls)
- நிதிக் கட்டுப்பாடுகள் (Finance controls)
- இணக்கக் கட்டுப்பாடுகள் (Compliance control) (06 புள்ளிகள்)

(c) **BIO** இல் நீங்கள் தனித்தனியாக அடையாளங்காண வேண்டிய நான்கு (04) பிரதான வணிகச் செயன்முறைகளை (key business processes) **நிரற்படுத்துக.** (04 புள்ளிகள்)

(d) IT பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் IT பிரயோகக் கட்டுப்பாடுகளின் நோக்கத்தை **வேறுபடுத்துக.** (03 புள்ளிகள்)

(B) கம்பனியானது வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றைக் கொண்டிருந்தால், மோசடி இடரையும் வழுக்களையும் அகற்றக்கூடியதாக இருக்குமென உமது நண்பர் ஒருவர் கூறியுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பற்றி உமது நண்பரால் தெரிவிக்கப்பட்ட கூற்றின் செல்லுபடித்தன்மை (validity) பற்றி **ஆராய்க.** (04 புள்ளிகள்)

(b) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) COSO இன் படி, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் இரண்டு (02) ஆக்கக்கூறுகளைக் (components) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக **வரையறுக்கப்பட்ட பெல் (தனி.) கம்பனியின் ("Bell")** சட்ட நியதிக் கணக்காய்வுக்குப் பொறுப்பான சிரேட்ட அலுவராக நீங்கள் இருக்கிறீர்கள். **Bell** ஆனது வாகனங்களுக்கான டயர்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதுடன் தயாரிக்கப்படும் டயர்கள் அனைத்தும் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கணக்காய்வு ஈடுபடுத்தலுடன் தொடர்புடைய பின்வரும் விபரங்கள் 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்காக உமது சிரேட்ட அலுவலரான **கசுன்** என்பவரால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டமிடல் ஞாபகக்குறிப்பு மற்றும் தொடர்புடைய வேலைத் தாள்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும் :

**Bell** என்பது ஒரு குடும்பத்திற்குச் சொந்தமான வணிகம் என்பதுடன் அதன் தற்போதைய உரிமையும் ஆளுகையும் (ownership and governance) கீழே தரப்பட்டுள்ளன :

| **பெயர்** | **உரிமை** | **குறிப்புகள்** |
|---|---|---|
| **திரு. மஹேல பெரேரா** | 60% | பணிப்பாளர் |
| **திருமதி. ஆசினி பெரேரா** | 30% | பணிப்பாளரும் **திரு. மஹேல பெரேரா**வின் மனைவியும் |
| **செல்வி. ரோஸி பெரேரா** | 10% | பணிப்பாளரும் **திரு. மற்றும் திருமதி மஹேல பெரேரா**வின் மகளும் |

- ஆண்டின் காலப்பகுதியில், **Bell** ஒரு CEO இனை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது.
- ஆண்டின் காலப்பகுதியில், **Bell** இல் **வரையறுக்கப்பட்ட ABC (தனி.) கம்பனி** வைத்திருந்த 30% பங்குகளை **திரு. மஹேல பெரேரா** வாங்கியிருந்தார்.

- ரூபா 250 மில்லியன் கிரயத்தில் புதிய உற்பத்தி ஆலை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, உற்பத்திக் கொள்ளளவு 30% இனால் அதிகரித்திருக்கிறது.
- பிரதானமாக கோவிட் - 19 நோய்ப் பரவலின் தாக்கம் காரணமாக ஆண்டிற்கான **Bell** இனுடைய விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25% இனால் குறைவடைந்துள்ளது.
- **Bell** கடந்த காலங்களில் தொடர்ச்சியாக 15% இலாப எல்லையை (profit margin) அடைந்திருந்ததுடன் நடப்பு ஆண்டில் அது 10% மாகக் குறைவடைந்திருக்கிறது.
- CEO இன் மிகையூதியமானது விற்பனைகள் மற்றும் இலாபங்கள் போன்ற முன்கணிப்புச் செய்யப்பட்ட பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் (KPIs) அடைவு (achievement) அடிப்படையில் கணிக்கப்படுகிறது.
- கடந்த ஆண்டின் ஈடுபடுத்தல் கடிதம் நடப்பு ஆண்டுக் கணக்காய்வுக்கும் பயன்படுத்தப்பட்டது.
- விற்பனையை மிகைப்படுத்திக் காட்டுவது மோசடி இடர் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- **கசுன்** ஒட்டுமொத்தமான நிதிக் கூற்றுக்களுக்கான பொருண்மையை மொத்தச் சொத்துக்களின் (மொத்தச் சொத்துக்களில் 5%) அடிப்படையில் கணிப்பீடு செய்திருக்கிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **Bell** இன் கணக்காய்வு நடைமுறைகளை மேற்கொள்ளும்போது, விசேட கவனம் தேவைப்படும் நான்கு (04) பகுதிகளை (areas) **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(b) ஈடுபடுத்தல் கடிதத்தின் கட்டுறுப்புகளைத் (terms) திருத்துவதற்கு, கணக்காய்வாளர் கவனத்திற் கொள்ள வேண்டிய மூன்று (03) நிபந்தனைகளைக் (conditions) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) கணக்காய்வொன்றைத் திட்டமிடுவதிலும் மேற்கொள்வதிலும் கணக்காய்வாளர் தொழில்சார் சுய தீர்மானத்தை (Professional judgement) மேற்கொள்ள வேண்டிய மூன்று (03) பகுதிகளை **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(d) **Bell** இன் கணக்காய்வு தொடர்பில் **கசுன்** ஏற்கனவே அடையாளங் கண்ட உதாரணம் ஒன்றுடன் "கணிசமான இடர் (significant risk)" என்னும் பதத்தை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) **Bell** இன் விற்பனையைக் கணக்காய்வு செய்யும்போது **கசுன்** மேற்கொள்ளக்கூடிய நான்கு (04) கணக்காய்வு நடைமுறைகளை **நிரற்படுத்துக.** (04 புள்ளிகள்)

(B) கணக்கீட்டின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையின் கீழ், உரிமமொன்று தொடர்ந்து இயங்குகிறது எனவும் எதிர்வருகின்ற எதிர்காலத்திலும் அதன் செயற்பாடுகள் தொடரும் எனவும் கொள்ளப்படுகின்ற எடுகோளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) தொடர்ந்தியங்கும் எடுகோளின் அடிப்படையில் நிறுவனமொன்று தொடர்ந்து இயங்குவதற்கான அதன் ஆற்றலின் மீது கணிசமானளவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிதிசார் குறிகாட்டிகளுக்கான (financial indicators) மூன்று (03) உதாரணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அடையாளங் காணப்படும்போது கணக்காய்வாளரால் ஆற்றப்பட வேண்டிய நான்கு (04) கணக்காய்வு நடைமுறைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |